முச்சந்தி முரளி




"நீங்கள் வேறநாடு நாங்கள் வேறநாடு எண்டதைத்தான் உவையள் சொல்லாமல் சொல்லுகினம் பாருங்கோ"


Registered as a Newspaper | பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 71


திங்கட்கிழமை
05 பெப்ரவரி 2024

தை 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


## அமைதிப் பேரணியில் பொலிஸ் அடாவடி

# களேபரமானது கரிநாள்!

### கண்ணீர்ப்புகைக்குண்டு, நீர்த்தாரைப்பிரயோகம்
### பெண்கள், எம்.பி.க்கள் மீதும் தாக்குதல்
### குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்று கைது



யாழ்ப்பாணம், பெப்ரவரி 5

கிளிநொச்சியில் நேற்று கரிநாளில் இடம்பெற்ற அமைதிப்பேரணியை பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு வீச்சு, நீர்த்தாரைப்பிரயோகம் மேற்கொண்டு கலைத்ததுடன், தாக்குதலும் நடத்தியதால் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தால் பேரணியில் கலந்துகொண்ட பலர் பாதிப்புக்குள்ளான நிலையில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் 5 பேர் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.


11




## இலங்கையின் கோரமுகம் சர்வதேசத்துக்கு அம்பலம்

### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப்.5

கிளிநொச்சியில் அமைதிப் பேரணி மீது பொலிஸார் மிலேச்சனத்தமாக நடந்து கொண்டனர். இந்தச் சம்பவம் இலங்கை அரசாங்கத்தின் கோரமுகத்தை மீண்டும் சர்வதேச சமூகத்துக்கு அம்பலப்படுத்தியுள்ளது என்று தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடத்தப்பட்ட பேரணியில் பொலிஸார் நடந்துகொண்டவிதம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பேரணியில் கலந்து கொண்ட பெண்களும் தாக்கப்பட்டனர்.


11




## இன்னும் எமக்கு சுதந்திரமில்லை!

### கிளிநொச்சி சம்பவம் அதையே காட்டுகிறது முன்னாள் எம்.பி. சரவணபவன் கருத்து

யாழ்ப்பாணம், பெப்.5

கிளிநொச்சியில் இன்று (நேற்று) பொலிஸார் நடந்துகொண்ட விதம் தமிழர்கள் மீதான அடக்குமுறையைத் தோலுரித்துக் காட்டுகின்றது என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற பேரணியில் பொலிஸார் நடத்திய வன்முறை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த


11


## வெகு விமரிசையாக சுதந்திரதின விழா

கொழும்பு, பெப்.5

இலங்கையின் 76 ஆவது தேசிய சுதந்திரதின விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுக் கொழும்பு காலிமுகத்திடலில் பெரும் நிதிச் செலவில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

"புதிய தேசம் அமைப்போம்" என்ற தொனிப்பொருளில் கொண்டாடப்பட்ட இந்த விழாவில் தாய்லாந்துப் பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். சுதந்திரதின அணிவகுப்பு பொலிஸ், சிவில் பாதுகாப்புப் படை மற்றும் தேசிய கடேட் படையினரால் முன்னெடுக்


11


## யாழ்ப்பாணத்தில் இறக்குமதிக் குழுவினரால் சுதந்திரதினக் கொண்டாட்டம்

### இராணுவப்புலனாய்வுப்பிரிவே ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.5

இலங்கையின் சுதந்திரதினம் நேற்றுக் கொண்டாடப்பட்ட நிலையில், யாழ்ப்பாணத்திலும் ஒரு குழு சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டது.


11


## சுதந்திரதின நிகழ்வை புறக்கணித்த தூதுவர்கள்

கொழும்பு, பெப்.5

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று காலிமுகத்திடலில் நடைபெற்ற நிலையில், கொழும்பிலுள்ள அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களும் இந்தியத் தூதுவரும் அந்த நிகழ்வுகளில் பங்குபற்றவில்லை. வெளிநாட்டுத் தூதுவர்கள் எவரும் நிகழ்வில் கலந்துக்கொள்ளவில்லை என்பதை ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.


11


## தொடர் காய்ச்சலால் பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்.5

காய்ச்சல் காரணமாகப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு, முள்ளியவளையைச் சேர்ந்த அன்ரன் அனிஸ்ரலஸ் (வயது-53) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

கடந்த 29 ஆம் திகதி இவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டதை அடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு


11


## முகாமையாளர் தாக்கி சீவல் தொழிலாளி சாவு

வடமராட்சி, பெப்.5

சீவல் தொழிலாளி ஒருவர் நுரையீரலில் கிருமித் தொற்று ஏற்பட்டு நிமோனியாவால் உயிரிழந்துள்ளார். பனைதென்னை வள சங்க முகாமையாளரின் தாக்குதலால் ஏற்பட்ட என்பு முறிவாலேயே கிருமித்


11



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுதந்திரதினத்தன்று வீதிகளுக்குப் பூட்டு

வவுனியா, பெப். 5
வவுனியா நகரசபை மைதானத்தில் இலங்கையின் 76ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெற்ற நிலையில் இரண்டு வீதிகள் சில மணிநேரங்கள் மூடப்பட்டிருந்தன. நகரசபை வீதி, நூலக வீதி ஆகிய வீதிகளே காலை 8.30 மணி தொடக்கம் முற்பகல் 10 மணிவரை மூடப்பட்டிருந்தன. அத்துடன் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. (ம-110)

## சுதந்திரதினம் கரிநாள் அம்பாறையில் பேரணி

அம்பாறை, பெப். 5
இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை கரிநாளாக அறிவித்து, அம்பாறையில் நேற்றுப் பேரணியும் போராட்டமும் முன்னெடுக்கப்பட் டன.
சுதந்திரதினத்தை கரிநாளாகக் கடைப்பிடிக்குமாறு வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினர் விடுத்த அழைப்புக்கு அமையவே இந்தப் பேரணியும் போராட்டமும் இடம்பெற்றன.
இந்தப் போராட்டத்தில் சிவில் சமூக அமைப்பினர், காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள், பொதுமக்கள், தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-27)

# நாட்டை மீட்கும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு



### யாழ். மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 5
**எமது நாடு எதிர்நோக்குகின்ற பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து சமூக, பொருளாதார, பண்பாட்டு சரிவுகளிலிருந்து நாட்டை நேர் நிறுத்தி அபிவிருத்திப் பாதையை நோக்கி முன்னேற்ற வேண்டும். ஒவ்வொரு குடிமகனுக்கும் நாட்டையும், நாட்டு மக்களையும் மீட்கும் பொறுப்பு இன்றியமையாதது.**
-இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.
இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டச் செயலக முன்றிலில் இடம்பெற்றது. அதில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
76ஆவது சுதந்திர தினத்தில் சுபீட்சமான தேசத்தைக் கட்டியெழுப்ப, கிராம மட்டத்திலிருந்து வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-66)

சுதந்திரதினத்தையொட்டி

## யாழ். சிறையில் 22 கைதிகள் விடுதலை

யாழ்ப்பாணம், பெப். 5
சுதந்திரதினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் இருந்து 22 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
நாட்டின் 76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதியின் விசேட பொதுமன்னிப்பின் அடிப்படையில் நாடுபூராகவும் சிறைச்சாலைகளில் இருந்து 754 கைதிகள் விடுதலை செய்யப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து 22 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிறைச்சாலை தலைமை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ம-26,66,100)




## கறுப்புக்கொடிகளை ஏந்தி முன்னணியினர் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 5
இலங்கையின் சுதந்திரதினம் என்பது தமிழர்களின் கரிநாள் என்று வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் முன்பாக நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.
'சுதந்திரநாள் தமிழருக்கு கரிநாள்', 'வடக்கு - கிழக்கு தமிழருடைய தாயகம்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும், கறுப்புக் கொடிகளை ஏந்தியும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-26)





இலங்கையின் 76ஆவது சுதந்திரதின நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் கொண்டாடப்பட்டன. கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. சுதந்திரதினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு மரநடுகையும் முன்னெடுக்கப்பட்டது. (ம-113)

# சுதந்திரதின விழாவில் தமிழில் தேசியகீதம்!

கொழும்பு, பெப். 5
இலங்கையின் 76ஆவது சுதந்திர தின விழாவின்போது தமிழ்மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டுள்ளது.
சுதந்திரதின விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுக் காலை காலிமுகத்திடலில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக தாய்லாந்து பிரதமர் பங்கேற்றிருந்தார்.
தேசிய கீதத்துடன் (சிங்கள மொழியில்) நிகழ்வு ஆரம்பமானது. நாட்டுக்காக உயிர் நீத்தோரை நினைவுகூரல், படையினரின் அணிவகுப்பு, கலாசார நிகழ்வுகள் என்பவற்றின் பின்னர் சுதந்திரதின விழா நிறைவு பெற்றது. இறுதியில் தமிழ்மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.
2015ஆம் ஆண்டு மைத்திரி - ரணிலின் ஆட்சிக்காலத்தில் தமிழ்மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படும் நடைமுறை கொண்டுவரப்பட்ட நிலையில், கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற காலத்தில் அந்த நடைமுறை நீக்கப்பட்டது. ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவான பின்னர், சுதந்திரதின நிகழ்வில் தமிழ்மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல பரீட்சைகளும் பிற்போகும் அபாயம்

*கல்வியமைச்சர் எச்சரிக்கை*



**கொழும்பு, பெப். 5**

**உயர்தர பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகள் தாமதமானால், இந்த வருடம் நடைபெறவுள்ள அனைத்துப் பரீட்சைகளும் பிற்போடப்படும் அபாயம் ஏற்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

கடந்த மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகளிலிருந்து ஆசிரியர்கள் விலகியுள்ளனர். கொடுப்பனவு தொடர்பில் நிலவும் பிரச்சினையின் அடிப்படையிலேயே இந்தப் போராட்டத்தில் ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையிலேயே, பரீட்சைத்தாள்கள் திருத்தும் பணிகள் பிற்போனால் இந்த வருடம் திட்டமிடப்பட்டுள்ள இதர பரீட்சைகளும் பிற்போகும் என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டைப் போலவே, ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை எவ்விதப் பிரச்சினையும் இன்றி வழங்கப்படும் என்றும் கல்வியமைச்சர் உறுதியளித்தார். (ச-இ)

## இந்திய மீனவர்கள் 23 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், பெப். 5

இலங்கை கடற்பரப்புக்குள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 23 இந்திய மீனவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் 23 மீனவர்களைக் கைதுசெய்தனர்.

அவர்கள் பயணித்த இரு படகுகளும் கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. (ஒ-100-66)




வவுனியா மாவட்டத்தில் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வவுனியா பிரதேச மருத்துவ அதிகாரி பிரிவிலுள்ள பல இடங்களில் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

டெங்கு பரவுவதற்கு ஏதுநிலையிலுள்ள பல குடியிருப்புகள் அவதானிக்கப்பட்டதுடன், அந்தக் குடியிருப்புகளுக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (ப-110)

## சீனத்துப் புறாவை விடுவித்தது இந்தியா

கிளிநொச்சி, பெப். 5

உளவு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட சந்தேகத்தில், சிறைப்பிடிக்கப்பட்ட சீனத்துப் புறாவை இந்தியா விடுவித்துள்ளது.

இந்தியாவின் மும்பைத் துறைமுகப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வகையில் பறந்து கொண்டிருந்த புறாவொன்று கடந்த வருடம் மே மாதம் இந்தியாவால் சிறைப்பிடிக்கப்பட்டது. புறாவின் கால்களில் சீன மொழியில் எழுதப்பட்ட வளையங்கள் பொருத்தப்பட்டிருந்தன. ஆதலால், இந்தப் புறா சீனத்துப் புறாவென்றும், உளவு வேலைகளுக்காக சீனாவால் பழக்கப்படுத்தப்பட்டு இந்தியாவுக்குள் அனுப்பப்பட்டுள்ளது என்றும் சந்தேகிக்கப்பட்டது.

புறாவின் உடலில் கருவிகள் எவையும் பொருத்தப்பட்டுள்ளனவா என்ற சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு கருவிகள் எவையும் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து புறா இந்தியாவால் சிறையிடப்பட்டது. சிறப்புப் பாதுகாப்பின் கீழும் புறா வைக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே மேற்படி புறா உளவுப் புறா இல்லை என்பது இந்தியாவால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தாய்வானில் இடம்பெறும் பந்தயப் போட்டிக்காகவே அது தயார்படுத்தப்பட்டுள்ளது என்பதும் திசைமாறி இந்தியாவுக்குள் பிரவேசித்துள்ளமையும் தெரியவந்ததையடுத்து அந்தப் புறா இந்தியாவால் பறக்கவிடப்பட்டுள்ளது. (ச-6)



## நல்லூரில் தற்போது தீவிர டெங்கு ஒழிப்பு

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் கீழுள்ள திருநெல்வேலி மற்றும் கொக்குவில் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்த பலருக்கு எதிராக சட்டவடிக்கை தொடரப்பட்டுள்ளது.

அதன்படி 7 பேருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளில் ஒருவருக்கு 8 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அறுவர் விசாரணையை எதிர்கொண்டு வருகின்றனர் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-555)

## பொருளாதார நெருக்கடியால் சொத்து விற்பனை தீவிரம்!

கடந்த மூன்றாண்டுகளில் 30 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமாக நகைகள் மற்றும் சொத்துகள் விற்கப்பட்டுள்ளன அல்லது அடமானம் வைக்கப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சகத் தகவல்களில் தெரியவந்துள்ளது. நாட்டில் தொடரும் பொருளாதார நெருக்கடியே இதற்குத் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் கடந்த சில ஆண்டுகளில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வாகனங்களும் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன், புதிய வாகனங்களின் கொள்வனவும் சுமார் 80 சதவீதம் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## புதினம் தெரியுமோ?

**அநேகமா எல்லாரும் பேய்ப்படங்கள் பார்த்திருப்பியள். ஏதும் ஒரு இடத்தில பேய் வந்திட்டுதெண்டால், அதை இன்னும் பதற்றமாக்கிறதுக்கு சில அறிகுறியளை படங்களில காட்டுவினம். கதவு பட படவெண்டு அடிக்கும், எங்கையாவது ஒரு பூனை வித்தியாசமாக் கத்தும், மேசையில இருக்கிற பாத்திரங்கள் கீழ திடீரெண்டு விழும், சும்மா இருந்த சாய்மனைக் கதிரை 'கிறீச், கிறீச்' எண்டு ஆடும், அதுவரைக்கும் எரிஞ்சு கொண்டிருந்த மெழுகுதிரி டப்பெண்டு நூர்ந்து போகும், கேர்ட்டின் சீலை எல்லாம் பிரபுதேவா மாதிரி கண்டபடி காத்துக்கு ஆடும், கண்ணைப் பறிக்கிறமாதிரி எரிஞ்ச பல்ப் 'கிர்க்.. கிர்க்'எண்டு ஒருமாதிரியா சத்தத்தோட விட்டு விட்டு எரியும். இப்பிடியெல்லாம் விளையாட்டுக் காட்டின பிறகுதான் பேய் வெளியில வரும். பேயைப் பாக்க முதலே இப்பிடியான வெருட்டுகளால படத்தைப் பாக்கிறவை கெலிச்சுப் போடுவினம். பேயைவிடவும் இந்தப் பின்னணி பில்டப்புகள் தான் ரென்சனைக் கூட்டும். படங்களில வாற இந்தக் காட்சியள் உண்மையாவே பேய் வாறதுக்கு அறிகுறி எண்டால், யாழ்ப்பாணத்திலயும் சில இடங்களில பேய் நடமாடுது எண்டுதான் பட்சி நினைக்குது.**

**அப்பிடியான இடங்களில ஒண்டு யாழ்ப்பாணம் ரெயில்வே ஸ்ரேசனில இருந்து ஆஸ்பத்திரி றோட்டில வந்து ஏறுற குறுக்கு றோட். இதை றோட் எண்டுறதை விட குச்சொழுங்கை எண்டுதான் சொல்லலாம். ரயில் தண்டவாளத்தோட ஒட்டி உரசிக்கொண்டு வந்து அப்பிடியே மெயின் றோட்டில இந்தப்பாதை முடியும். சிக்னல்ல நிண்டு மினக்கெடாமல் ரெயில்வே ஸ்ரேசனுக்கோ, அதுக்குப் பக்கத்தில இருக்கிற ஹொட்டல்களுக்கோ போறதுக்கு கனபேருக்கு இதுதான் சுகமான பாதை. இந்தப் பாதையால இரவு 9 மணிக்குப் பிறகு போய் வாறவைக்கு கட்டாயம் ஹார்ட் அற்றாக் வராமல் விடாது. இந்தக் குறுக்கு றோட்டில வெளிச்சத்துக்காக ஒரு பத்துப் பதினைஞ்சு 'லைட்' பூட்டியிருக்கு. எல்லா லைற்றும் சொல்லி வைச்ச மாதிரி 9 மணிக்குப் பிறகு பேய் வரேக்க மின்னி மின்னி எரியிற மாதிரி விட்டுவிட்டுத்தான் எரியும். அதோட 'கிர்' என்ட சத்தம் வேற. உந்த லைற்றுகள் ஒவ்வொருநாளும் இப்பிடித்தான் எரியுது எண்டது தெரியாமல் தனிய ஆரும் போனால், பிச்சை வேண்டாம் நாயைப் பிடி எண்டு ஓடாமல் இருக்காயினம். அந்தளவுக்கு லைற்றுகள் பயப்பிடுத்துறமாதிரித்தான் மின்னும்.**

**கிழமைக்கணக்கா இப்பிடி பேய் விளையாட்டுக் காட்டுற லைற்றுகளைத் திருத்தவேணும் எண்ட எண்ணம் ஒருத்தருக்கும் இல்லை. அந்த றோட்டில இருக்கிற சனங்களும் இதைப்பற்றி ஒரு இடமும் முறைப்பாடும் குடுக்கேலையாம். ஆனால் இதெல்லாம் முறைப்பாடு கிடைச்சோ திருத்தோணும். ஒரு லைற், ரண்டு லைற் இப்பிடி மின்னி எரிஞ்சால் பரவாயில்லை. எல்லா லைற்றும் எல்லோ மின்னிக் கொண்டிருக்குது. உந்த றோட்டில தனியப்போய் வாறவையை, மின்னி எரியிற லைற்றை வைச்சுப் பயப்பிடுத்தி ஆரும் களவில இறங்கமுதல், உரியவை திருத்திற காரியத்தில இறங்குவினமோ?**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்து சென்றவர்கள் நாட்டுக்குத் திரும்பவேண்டும்!

## குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள பிரதிக் கட்டுப்பாட்டாளர் தெரிவிப்பு

வவுனியா, பெப். 5

**இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து இந்தியாவுக்குச் சென்று முகாம்களில் தங்கியிருப்பவர்கள், மீண்டும் இலங்கைக்குத் திரும்பவேண்டும் என்று இலங்கை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் ஈ.எச். நயனா பிரசங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிரந்தரமாக இந்த நாட்டு பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் வரப்பிரசாதங்களை அனுபவித்தல் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. பிரஜாவுரிமை பெறுவதற்கான சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் அமைச்சர் மற்றும் அமைச்சரின் செயலாளர் ஆகிய இருவரும் பத்திரத்தில் கையொப்பம் இடவேண்டும். அதற்கான பத்திரத்தில் கையொப்பம் வைத்த பின் சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாக வந்து கொழும்பில் பெற வேண்டும். இது தபாலில் அனுப்பப்பட மாட்டாது. ஆனால், உங்களுக்காக மீண்டும் பத்திரத்தை வவுனியாவில் வைத்து விரைவாக வழங்கத் தீர்மானித் துள்ளோம். உங்களது சிரமத்தையும், அதிக பணச்செலவு ஏற்படுவதைத் தடுக்கவும் இந்தத் திட்டத்தை நாம் செய்கின்றோம்.

குறித்த பிரஜாவுரிமை சான்றிதழ் வாழ் நாளில் ஒரு தடவை மாத்திரமே வழங்கப்படும். மூலப் பிரதிகளை எங்கும் கொடுக்காமல் அதன் பிரதிகளை வழங்கி உங்கள் செயற்பாடுகளை நீங்கள் முன்னெடுக்கமுடியும்.

நான் வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றேன். போர் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் முகாம்களிலும், முகாம்களுக்கு வெளியிலும் இருப்பவர்கள் இங்கு வரவேண்டும். அவர்களும் இவ்வாறு பிரஜாவுரிமையைப் பெறமுடியும்.

நாட்டைவிட்டு தற்போது எவ்வளவு பேர் வெளியேறினாலும் நாங்கள் உங்களைவரவேற்கின்றோம். ஒரு நாடு, ஒரு மக்களாக இருந்து இந்த நாட்டை முன்னேற்றுவோம் - என்றார். (ம-110)



இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று மீண்டும் இலங்கைக்குத் திரும்பியவர்களுக்கு குடியுரிமை வழங்கும் விதமாக சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. 51 பேர் இவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். (ப-110)

# வாயுத் துப்பாக்கிகளை வழங்கக் கோரிக்கை

கிளிநொச்சி, பெப். 5

கிளிநொச்சி - ஸ்கந்தபுரம் கிராமத்துக்கு வருகின்ற குரங்குகளை விரட்டுவதற்கு வாயுத் துப்பாக்கிகளை வழங்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக் கூட்டங்களில் கடந்த 14 ஆண்டுகளாகக் குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தபோதும் அவர்கள் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஸ்கந்தபுரத்தில், குரங்குகளால் ஏற்பட்டு வருகின்ற பெருமளவு பயிர் அழிவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு 4 வாயு துப்பாக்கிகளைப் பெற்றுக்கொடுப்பதாக கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கரைச்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ப-13)

சுதந்திரதினத்துக்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் வாகனப் பேரணி ஒன்று நேற்று இடம்பெற்றது. வன்னி மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பேரணியில் அனைத்து வாகனங்களிலும் தேசியக்கொடிகள் கட்டப்பட்டு சுமார் நூறு வரையிலான வாகனங்கள் ஊர்வலமாகச் சென்றன. (ச-18)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். தாயாரின் உடல் நிலை சீராகும். கல்யாணப் பேச்சு சாதகமாக முடியும். மகிழ்ச்சியான நாள். திடீர்ச் செலவுகளும் ஏற்படும். முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் கூடுதலாகும்.

**இடபம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமற்போன முக்கியமான ஆவணம் ஒன்று கிடைக்கும். புது யுக்திகளை கையாள்வீர்கள்.

**மிதுனம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களை சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள். இழப்புகளை சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண் கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து லாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அலைச்சல் உண்டு. திடீர்ப் பயணங்கள் இருக்கும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடிவரும்.

**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்று கொள்வீர்கள்.



# புதிரெடுக்கும் விழாவில் இயக்குநர் செல்வமணி

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கு வாலை அம்மன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் தைப்பூச தினத்தை முன்னிட்டு புதிரெடுக்கும் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்னிந்திய பட இயக்குநரும், அரசியல்வாதியும், நடிகை ரோஜாவின் கணவருமான ஆர்.கே.செல்வமணி பங்கேற்றார். இதன்போது 32 பானைகளில் புத்தரிசியிட்டு பொங்கல் பொங்கி வழிபாடு இடம்பெற்றது. தொடர்ந்து கலைநிகழ்வுகளும் பாரம்பரிய விளையாட்டுகளும் சிறப்புற்றன. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## என்று தணியும் வெளிநாட்டுமோகம்?

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பார்கள். இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறை - இனவழிப்புக் காரணமாக உயிர்பிழைக்கும் நோக்குடன் வெளிநாடுகளுக்கு தமிழர்கள் ஓடித்தப்பினர். காலஓட்டத்தில் வெளிநாட்டுக்குச் செல்வது என்பது ஒரு கட்டாயக் கடமையாகவே மாறிவிட்டது. போர்க்காலத்திலும் அதன் பின்னரான காலத்திலும் வெளிநாட்டுக்குச் செல்லும் கனவுடனேயே இளைஞர்கள் பெற்றோரால் வளர்க்கப்படும் துரதிர்ஷ்டமான சூழலே இங்கு அதிகம் நிலவுகின்றது.

2011 - 2015 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அதிகளவானோர் சட்டவிரோதமான வழியில், படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லலாம் என நம்பவைக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் பலர் கடலில் வைத்து கடற்படையால் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டனர். வெகு சிலரே அவுஸ்திரேலியாவுக்கு அண்மித்த தீவுகளை சென்றடைந்தனர். அவர்களில் மிகச் சிலருக்கே அவுஸ்திரேலியாவுக்கு நுழைவதற்கான அனுமதி கிடைத்தது. பல இலட்சங்களைச் செலவு செய்து ஏமாந்தவர்களே அதிகம். அவுஸ்திரேலிய அரசாங்கம், சட்டவிரோதமாக தனது நாட்டுக்குள் நுழைய முடியாது என்பதை பரப்புரைப்படுத்தினாலும் எம்மவர்களின் வெளிநாட்டு ஆசை முன்பாக அவை ஏறவில்லை. 2016 - 2020 வரையிலான காலப் பகுதியில் ஐரோப்பிய நாடுகளுக்குள் சட்டவிரோதமாக நுழைவதற்குச் சென்ற எம்மவர்கள் பலர் அங்கு உயிரிழந்த சோகங்கள் அரங்கேறியிருந்தன. எல்லைப் படைகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். பல நாள் நடைபயணம், ஆபத்தான வகைகளில் கனரக வாகனங்களில் அடைத்துச் செல்லப்படுதல் என ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைவதற்கு முயன்று உயிர் பிரிந்த சோகங்கள்தான் நடந்தன. இப்போது கனடாவுக்குச் செல்லுதல் என்ற அடிப்படையில் பலரும் தங்கள் புலம்பெயர்தலை ஆரம்பித்திருக்கின்றனர். நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாகச் செல்கின்றோம் என்று சொல்லிக் கொண்டாலும், வெளிநாட்டுக் கலாசாரம் எங்கள் மனதில் இன்னமும் ஆழமாக வேரூன்றியிருப்பதுவும் தற்போதைய புலம்பெயர்தலுக்குக் காரணமாக இருக்கின்றது.

இதை வைத்து பணம் உழைக்கும் கூட்டமும் இருந்துகொண்டிருக்கின்றது. எத்தனை தடவைகள் ஏமாந்தாலும் மக்கள் மீண்டும் மீண்டும் வெளிநாட்டு மோகத்தால் பல இலட்சங்களை இழப்பதற்குத் தயாராக இருக்கின்றனர். வடக்கிலுள்ள பொலிஸ் நிலையங்களில், அண்மைக்காலமாகப் பதிவாகும் முறைப்பாடுகளில் பிரதான இடத்தைப் பிடித்திருக்கும் சம்பவமாக, வெளிநாட்டுக்குச் செல்வதற்காக முகவர்களுக்கு பணத்தைச் செலுத்தி ஏமாறுவதே இருக்கின்றது. இது தொடர்பில் பொலிஸார் மக்களுக்கு பலமுறை அறிவுறுத்தியும் திரும்பத் திரும்ப ஏமாந்து கொண்டேயிருக்கின்றனர். எந்தவொரு நம்பிக்கையும் இல்லாது வெளிநாட்டுமோகத்துக்காக பல இலட்சங்களை இழக்கத் தயாராக இருக்கும் மக்கள் அதை இங்கேயே முதலீடாக்கி வருமானமீட்டத் தயாரில்லை, தமிழ் அரசியல் தலைமைகளும் இந்த விடயங்கள் தொடர்பில் மக்களை அறிவூட்டுவதில்லை. வெறுமனே அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவது மாத்திரம் அவர்களது பொறுப்பு அல்ல. எந்த மக்கள் கூட்டத்துக்கு தலைமை தாங்குகின்றனரோ, அவர்கள் வழிதவறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதும் அவர்களது கடமையே.



# அரச எதிர்ப்பு நிலையை ஒடுக்கச் சட்டஏற்பாடுகள்

## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, பெப்.5**

**ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்புகள் உட்பட அரசாங்கத்தின் கொள்கையுடன் உடன்படமறுக்கும் மக்களின் நடவடிக்கைகளை பயங்கரவாத முத்திரைகுத்தி நசுக்குவதற்கான சட்ட ஏற்பாடுகளே உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் உள்ளன என்று உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. இதன்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளின் பாதகத்தன்மைகள் தொடர்பில் சட்டத்தரணிகளால் உயர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், செயலாளர் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி சாலிய பீரிஸ், "புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் பயங்கரவாதத்துக்கான வரைவிலணக்கம் பரந்துபட்டதாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் கொள்கைகளுடன் உடன்பட மறுப்பவர்கள் கைதுசெய்யப்பட்டு புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவின் கீழ் தடுத்துவைக்கப்படும் நிலை ஏற்படலாம்" என்று சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டவரைவின் கீழ், தனிப்பட்ட சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான அவசியமான ஏற்பாடுகள் எதுவும் இல்லைஎன்றும் சாலிய பீரிஸ் தன் சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

(ச-இ)

இலங்கையிலிருந்து கடத்தப்பட்ட

## பெருந்தொகை தங்கம் பாம்பனில் மீட்கப்பட்டது

இலங்கையிலிருந்து கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சுமார் 3 கோடி மதிப்பிலான தங்கம் பாம்பன் அருகே நேற்றுமுன்தினம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

திருச்சி சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டது. சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். (ச)

## இலங்கை - தாய்லாந்து வர்த்தக ஒப்பந்தங்கள்

வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்தும் வகையில் தாய்லாந்து அரசாங்கத்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தாய்லாந்து பிரதமர் ஷ்ரேத்தா தவீசின் முன்னிலையில் நேற்றுமுன்தினம் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. (ச-இ)

## 754 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு!



76ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 754 கைதிகளுக்கு பொதுமன்னிப்புவழங்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ச-இ)

**விருந்தில் தகராறு: ஒருவர் படுகொலை**

மத்துகம, வெலிகட்டிய –சந்தசிரிகம பிரதேச வீடொன்றில் இடம்பெற்ற விருந்தின்போது ஏற்பட்ட வாக்குவாதத்தின் விளைவாக கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு 27 வயதான ஒருவர் நேற்றுமுன்தினம் கொல்லப்பட்டுள்ளார். (ஒ-இ)

**நாளை**

06.02.2024
**செவ்வாய்க்கிழமை**
**தை – 23**
சுபநேரம் : 11.05 – 12.35
ராகுகாலம் : 03.35 – 05.05
**ஏகாதசி விரதம்**

**நாளொரு நல்வார்த்தை**

**உங்களுக்கு என்ன தெரியும் மற்றும் என்ன தெரியாது என்பதை அறிந்துகொள்வதே உண்மையான அறிவு.**

**- கன்பூசியஸ் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எரிகிறது சிலி: 46 பேர் பலி!

சான்தியாகோ, பெப். 5

தென்னமெரிக்கக் கண்டத்தின் சிலி நாட்டில் நேற்று ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி 46 பேர் உயிரிழந்துள்ளனர்.

மத்திய சிலியில் உள்ள காட்டுப் பகுதியில் இந்தப் பேரிடர் ஏற்பட்டுள்ளது. அந்தப் பகுதி குடியிருப்புகளும் நிறைந்தது என்பதால் ஆயிரக் கணக்கான வீடுகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. கால்நடைகள் மற்றும் வாகனங்களும் தீக்கிரையாகியுள்ள காட்சிகள் சில ஊடகங்களால் வெளியிடப்பட்டுள்ளன.

உயிரிழந்த 46 பேரைத் தவிர படுகாயமடைந்த பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)




## புற்றுநோய் தாக்கத்தால் நமீபிய அதிபர் மறைவு!

வின்டோயிக், பெப். 5

ஆபிரிக்க நாடான நமீபியாவின் ஜனாதிபதி ஹேக் காட்பிரைட் ஜிங்கோப், தனது 82ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

நமீபிய ஜனாதிபதிக்கு புற்றுநோய் இருப்பது அண்மையில் கண்டறியப்பட்டது. ஆரம்ப நிலையில் அல்லாமல் அடுத்தகட்டப் படிநிலைகளைத் தாண்டிய நிலையிலேயே அவருக்கு நோய் உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் அவர் உயிர்பிழைப்பது கடினம் என்று கூறப்பட்ட நிலையில், நமீபியத் தலைநகர் வின்டோயிக்கில் உள்ள மருத்துவமனையில் நேற்றுக் காலை அவர் உயிரிழந்தார்.

ஜனாதிபதி ஹேக் காட்பிரைட் ஜிங்கோப்பை அமெரிக்காவுக்கு அனுப்பி அங்குவைத்து சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகளை நமீபியா அரசாங்கம் முன்னெடுத்திருந்தது. இந்த நிலையில் அவரின் உயிரிழப்பானது பல் வேறுபட்ட அதிர்வலைகளை நமீபியாவில் ஏற்படுத்தியுள்ளது. (ம)



## குளிக்காத கணவர்: பெண் விவாகரத்து!

அங்காரா, பெப். 5

துருக்கியைச் சேர்ந்த பெண்ணொருவர், பல நாள்களாக குளிக்காமல் மற்றும் பல் துலக்காமல் இருந்த தனது கணவனை விவாகரத்துச் செய்துள்ளார்.

குறித்த பெண் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கு, அண்மையில், துருக்கிய தலைநகர் அங்காராவில் உள்ள குடும்பநல நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பல நாள்களாக குளிக்காமல் இருப்பதையும் வாரத்தில் சில நாள்கள் மாத்திரமே பல் துலக்குவதையும் தனது கணவனை விவாகரத்துச் செய்கின்றமைக்கான முக்கியமான காரணங்களாக அந்தப் பெண் குறிப்பிட்டார்.

கணவனின் இந்தப் பழக்கம் காரணமாக அவர்களின் திருமண உறவு பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாகவும் அதற்கு சம்பந்தப்பட்ட ஆணே காரணம் எனத் தீர்ப்பளித்துள்ள நீதிமன்றம், விவாகரத்துடன் சேர்த்து பெண்ணுக்கு இழப்பீடாக ஐந்து லட்சம் லீரா வழங்கவேண்டும் எனவும் உத்தரவிட்டது. (ம)

## 4 நாள்கள் வேலை 3 நாள்கள் விடுமுறை

வாரத்தில் 4 நாள்கள் வேலை 3 நாள்கள் விடுமுறை என்ற புதிய நடைமுறையை இந்த மாதம் தொடக்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது ஜேர்மனி அரசாங்கம்.

இந்த நடைமுறையை முன்னதாக சுவீடன் உள்ளிட்ட பல நாடுகள் நடைமுறைப்படுத்தின. அதனால் அங்கு பணியாளர்களின் மகிழ்ச்சி அதிகரித்துள்ளதுடன் உற்பத்தித் திறனும் கூடியுள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவித்தன.

இந்தநிலையிலேயே குறித்த வேலைத்திட்ட முறைமையை ஜேர்மனியும் பின்பற்றியுள்ளது. (ச-இ)


## உக்ரைன் தாக்குதல்; 20 பொதுமக்கள் பலி!

### ரஷ்யா குற்றச்சாட்டு

மொஸ்கோ, பெப். 5

ரஷ்யப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள உக்ரைனின் லிசிசான்ஸ்க் நகரில் உக்ரைன் நடத்திய தாக்குதலில் 20 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 12 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு ரஷ்யா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் ஆரம்ப காலங்களிலேயே உக்ரைனின் லிசிசான்ஸ்க் நகரம் ரஷ்யப் படைகளால் கைப்பற்றப்பட்டது. கடந்த ஒன்றரை வருடங்களாக ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த நகரத்தின் மீதே உக்ரைன் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன. மேற்கத்தேய நாடுகளின் ஆயுதங்களைப் பயன்படுத்தியே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது. ரஷ்யாவின் குற்றச்சாட்டுத் தொடர்பில் உக்ரைன் எந்தக் கருத்துகளையும் வெளியிடவில்லை. (ம)



### இஸ்லாம் விதிமீறி திருமணம்

## இம்ரான்கான் தம்பதியருக்கு மேலும் ஏழு ஆண்டுகள் சிறை!

இஸ்லாமபாத், பெப். 5

இஸ்லாம் குறிப்பிடும் விதிகளை மீறி திருமணம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இம்ரான்கானுக்கும் அவருடைய மனைவிக்கும் 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் கடந்த 2018ஆம் ஆண்டில் புஷ்ரா பீவி என்பவரை திருமணம் செய்தார். அவர்களின் திருமணத்தை எதிர்த்து புஷ்ரா பீவியின் முன்னாள் கணவர் கவார் பிரீத், ராவல்பிண்டி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

கடந்த 1989ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டுவரை கவார் பிரீத்தும் புஷ்ரா பீவியும் கணவன், மனைவியாக வாழ்ந்தனர். கடந்த 2017ஆம் ஆண்டில் இருவரும் பரஸ்பரம் விவாகரத்து செய்தனர். முஸ்லிம் திருமண விதிகளின்படி கணவரை இழந்த பெண் அல்லது கணவரை விவாகரத்து செய்த பெண் உடனடியாக மறுமணம் செய்யக்கூடாது. சம்பந்தப்பட்ட பெண் கர்ப்பமாக இருக்கிறாரா? இல்லையா? என்பதை அறிய குறிப்பிட்ட காலம் காத்திருக்கவேண்டும். இது 'இத்கா காலம்' என்று அழைக்கப்படுகிறது.

இந்தக் காலம் நிறைவடைவதற்கு முன்பே புஷ்ரா பீவியை, இம்ரான் கான் திருமணம் செய்துள்ளார் என்பதே புஷ்ரா பீவியின் முன்னாள் கணவர் கவார் பிரீத் முன்வைத்த குற்றச்சாட்டாக அமைந்தது. (ம)

## பாரிஸில் கத்திக்குத்து மூவர் படுகாயம்!

பாரிஸ், பெப். 5

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடத்தப்பட்ட கத்திக்குத்துத் தாக்குதலில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

பாரிஸின் சனநெரிசல்மிக்க ரயில் நிலையங்களில் ஒன்றாக அடையாளப்படுத்தப்படும் கரே டி லியோன் ரயில் நிலையத்திலேயே நேற்று இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Institute of Junior

## Spoken & Written Elocution

### பரீட்சையில் 100 புள்ளிகளை பெற்ற 84 மாணவர்களை பாராட்டுகின்றோம்

வாழ்த்துக்கள் Best Wishes



P.அபிஷேக், பியோனிக்கா, S,டயனிகா, J.சஷ்விகா, J.அஷ்மிகா, V.சர்வின், P.தருகேஷன், T.யாழோவியன், K.கிருத்திக்

K.அனாமிகா, P.அஸ்வின், S.ஷஞ்சனா, U.மாதுளன், A.ஆதனா, S.சாதுரியா, K.வர்ஷா, B.அபிவர்ஷி, K.ஜானுகா, ..அஷ்வின்

M.ஹரினேஷ், K.மோகலஜா, S.ஹர்ஷிகா, G.றேமிகா, K.யினோஸ்பியா, K.சன்சயா, G.மிதுகர்சன், T.ஜதுஜன், T.ஜருசன், S.கனிஸ்ரிகா

K.அட்சயன், R.ஆத்விக், M.நிக்சிகா, S.கனழஷ்யா, G.சந்தோஷி, P.ஆரஷன், T.கர்ஷியன், T.ஜஷ்வினி, J.கௌதம், P.அக்ஷயா

T.நிதிக்ஷன், R.யனுஷாதனா, K.ஷரத், N.சாகித், S.யிவானு, N.இலக்கிய, N.இலக்கணா, K.கிஷாழினி, J.சுவர்ணிகா, S.அபிராம்

M.பவிஷனா, T.கிதுஷிகன், J.அபிஷ்னா, K.திவிகா, T.ஶ்ரீகிருஷணிகா, T.எப்சிபா, Y.ஆரூத், P.திபிஸ், G.ஹர்ணிகா, R.கேஷிகன்

S.லோஜிதன், K.மிஸ்ரியா, P.பிரவீன், K.மித்திரா, K.நதீஷா, J.ஆதித்தன், A.அக்ஷரன், T.கிருஸ்வினா, P.லிஷாதன, V.லஜினன்

P.பிரக்கியா, s.நவினன், T.ஆதித்யா, U.ஆகிஷ், K.மயுரேசன், P.வருணிகா, S.ஹர்ஷா, K.ஷிருஸ்ரிஹரன், G.சஸ்மிதா, J.அக்சயன்

A.லகானா, K.யதுஷ்னா

* T.அக்ஷயா
* D.மதுவர்ஷா
* D.ரேணுசா

**வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்:**

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி

Best Wishes

வாழ்த்துக்கள் Best Wishes

**ஆசிரியர் - திருமதி பிரகாஷ் சுமிதா**

**கிளி / கிளிநொச்சி மகாவித்தியாலயம்**

- Elocution Classes எலக்கியூசன் வகுப்புக்கள் (Spoken & Written) 4 வயதிலிருந்து 14 வயதுவரை
- English Classes (ஆங்கில வகுப்புக்கள்)

**இல.926, பருத்தித்துறை வீதி, நல்லூர். (சட்டநாதர் கோயில் முன்) 077 199 9630**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக முற்றோதலும் அபிராமி அந்தாதி படிப்பும்

யாழ்ப்பாணம், பெப். 5
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள் மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ண லிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ண கியம்மன் ஆலயத்தில் நாளை செவ் வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் திருவாசகமுற்றோதல் நிகழ்வு இடம்பெ றும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை தை அமா வாசை உற்சவநிகழ்வு காலை 7 மணிக்கு இடம்பெறும். தொடர்ந்து மாலை 4 மணிக்கு அபிராமி அந்தாதி படிப்பும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச)

## பாற்குடபவனி

யாழ்ப்பாணம், பெப். 5
சங்கரத்தை குளத்தடி அருள்மிகு ஸ்ரீநாக பூசணி அம்பாள் ஆலய மஹோற்சவ பெரு ந்திருவிழா கடந்த 28ஆம் திகதி ஆரம்பமா கியது.

தொடர்ந்து 11 தினங் கள் நடைபெறும் உற்ச வத்தில் நாளை செவ் வாய்க்கிழமை தேர்த்தி ருவிழா இடம் பெறும். அன்றையதினம் காலை 7 மணிக்கு சங்கரத்தை அருள்மிகு ஸ்ரீபத்திர காளி சமேத வீரபத்திர சுவாமி ஆலயத்திலி ருந்து பாற்குடபவனி இடம்பெறவுள்ளதுஎன்று ஆலய நிர்வாகம் தெரி வித்துள்ளது. (ச)

## இராசபாதை வீதியில் வழிப்பறி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 5
கோப்பாய் - இராச வீதியில் வழிப்பறி அச்சுறுத் தல் அதிகரித்துள்ளதால் அச்சத்துடன் பய ணிக்க நேரிடுகிறது என்று பாதசாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலை வேளை மோட்டார் சைக்கிள் பயணித்த பெண்ணொருவர் அணிந் திருந்த தங்கச்சங்கிலியை வழிப்பறி கொள் ளையர்கள் அறுத்தெடுத்து தப்பிச் சென்றுள்ள னர். பெண் காயமடைந்த நிலையில் யாழ். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனவே குறித்த பகுதியில் அதிகரித்துள்ள வழிப் பறிக் கொள்ளையைத் தடுப்பதற்கு கோப்பாய் பொலி ஸார் கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்த னர். (ச-17)

## மரண அறிவித்தல்



### பொன்னுத்துரை திருஞானந்தம் (நொப்பன்)

மண்கும்பான் 04ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 05ஆம் வட்டாரத்தை வசிப்பிட மாகவும் கொண்ட பொன்னுத்துரை திருஞானந்தம் (நொப்பன்) அவர்கள் நேற்று (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், துரைசிங்கம் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், சந்திரகலாவின் பாசமிகு கணவரும், சுரேக்கா, சண்ஷிகா, தமிழ் மைந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அற்றியனது அன்புப் பேரனும், குகன் (நீர்வேலி), காலஞ்சென்ற புஸ்பகலா (அங்கயற்கன்னி), ரூபன் (லண்டன்), காந்தன் (சுவிஸ்), சுகுந்தன் (பிரான்ஸ்), குமுதா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பவானி, யோகராணி, சுசி, லக்ஷா, அருந்தவநாதன் ஆகியோரின் சகோதரனும், பரமேஸ்வரி காலஞ்சென்ற பராசக்தி, புவனேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற பராசிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் தாய்வழி மருமகனும், காலஞ்சென்ற நடராசா, கனகம்மா, தம்பதியரின் தாய்வழி பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2024) திங்கட்கிழமை பிறபகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.


(CS 27811) A-1

# பதினாறாம் ஆண்டு நினைவஞ்சலி

## செல்லத்துரை குணரத்தினம்
## (சின்னமணி)

தோற்றம் 21.06.1953 — மறைவு 12.02.2007

திதி: தசமி



அப்பா நீங்கள் எமை விட்டுப்பிரிந்து சென்று
பல ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் எம் மனதோடு..!
வாழ்க்கையின் பல இன்னல்களை கடந்தாலும்
வாழ்க்கை வரன்முறையை கற்றுத்தந்து
சென்ற எம் அன்புத்தந்தையே..!
பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றுவதுதான்
தந்தையின் வாழ்நாள் கனவு,
அந்தக்கனவுகள் மெய்ப்படும் நேரம்
எம்அருகில் நீங்களில்லையே..!
மீண்டும் ஒருமுறை அந்த முறுக்கிய மீசையுடன்
உன் தோழில் தூக்கி
ஊர்த்திருவிழா காட்ட மாட்டாயா.? என ஏங்குகிறது
என்மனம்..!

பிரிவால் துயருறும்
மனைவி ரோசா,
பிள்ளைகள் : சசி, றெஜி, உமேஸ், ரோஜன்.

CR/ 41740 (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மாந்தை கிழக்கு, ஆதிரை அமைப்பின் முல்லைத்தீவு கிளையினரால் பாண்டியன்குளம் கிராமசேவையாளரும் ஆதிரை அமையத்தின் முல்லை இணைப்பாளருமாகிய க.சுஜாந் தலைமையில் புலமைப்பரிசில் சாதனையாளர்களுக்கான கௌரவிப்பு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ப-13)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முல்லைத்தீவு மாவட்ட கிளையின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஒன்றுகூடல் அண்மையில் கிளை மாநாட்டு மண்டபத்தில் கௌரவ கிளைத் தலைவர் க.சுதர்சன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் செஞ்சிலுவைச் சங்கத்தின் தன்னார்வத் தொண்டர்கள் தங்களின் அர்ப்பணிப்பான மனிதாபிமான சேவைகளுக்காகக் கௌரவிக்கப்பட்டனர். கனகம்மா அறக் கட்டளை (யு.கே.) உடன் இணைந்து முல்லைத்தீவு கிளையின் புதிய முயற்சியாக பொருண்மியம் நலிவுற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தார். (ப-19)




## நூல் வெளியீடு

கோப்பாய், நாவலர் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் இயல்வாணன் எழுதிய 'யாரும் பாடலா் என்னை' கவிதை நூலின் வெளியீட்டுவிழா அண்மையில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், தாயகம் சஞ்சிகை ஆசிரியருமான க.தணிகாசலத்தின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் எழுத்தாளர் சட்டத்தரணி சோ.தேவராஜா வெளியீட்டுரையினை நிகழ்த்தி நூலை வெளியிட்டு வைத்தார். நூலின் முதற்பிரதியை நூலாசிரியரின் மாமியார் திருமதி தாமோதரம்பிள்ளை சிவபாக்கியம் பெற்றுக்கொண்டார்.


மதிப்பீட்டுரைகளை பண்டத்தரிப்பு [illegible]கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியரான எழுத்தாள[illegible]ர்சகர் ந.குகபரனும், கிராம அலுவலர் கவிஞர் வ.வ[illegible]யனும் நிகழ்த்தினர். ஏற்புரையை வலிகாமம் [illegible]திக் கல்விப் பணிப்பாளரான கவிஞர் இயல்வ[illegible]கழ்த்தினார். நிகழ்வை கலாசார உத்தியோகத்த[illegible]ன் தொகுத்து வழங்கினார். நிகழ்வில் எழுத்தாள[illegible]லைஞர்கள், வாசகர்கள் எனப் பலரும் கலந்து [illegible]ார். (ப)



சண்டிலிப்பாயில் சிறுவர், பெண்கள் முறைப்பாடுகளைக் கையாள்வது தொடர்பான கலந்துரையாடலொன்று சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி, சண்டிலிப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர், மானிப்பாய், இளவாலை சிறுவர் பெண்கள் பிரிவுப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப -66)

கொடிகாமம், கிறிசலிஸ் நிறுவனத்தின் யாழ். மாவட்ட குடிசார் அமைப்புகளின் சம்மேளன செயற்குழுவின் பொருண்மியம் நலிவுற்ற கிராமங்களை வளப்படுத்தும் நோக்கில் கிராம மட்ட அமைப்புகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் அண்மையில் ஜே/363, கரவெட்டி மேற்கு, இராஜகிராமத்தில் கிராமஅலுவலர் க.ரதீசன் தலைமையில் ராஜகிராம பொது மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், குடிசார் அமைப்புகளின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் மற்றும் கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-159)





வவுனியா பூவரசன்குளம், கந்தன்குளம் பகுதியிலுள்ள பொருண்மியம் நலிவுற்ற 53 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் ஓமந்தை "எக்ஸ்போ ஸ்ரில் ஹா[illegible]ர்" நிறுவனத்தின் பிரபல வர்த்தகரும் சமூகசேவையாளருமான [illegible]ரேஸின் நிதிப் பங்களிப்பில் இவை வழங்கப்பட்டன. (ப)

## தலைமைத்துவப் பயிற்சி



முல்லைத்தீவு வலயத்துக்குட்பட்ட புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, றோமன் கத்தோலிக்க தமிழ் மகளிர் பாடசாலை, குமுழமுனை மகா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளிலிருந்து 44 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கு "விசன்ஸ் குளோபல் எம்பவர்மன்ற்" நிறுவனத்தால் தலைமைத்துவப் பயிற்சி 22 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை ஐந்து நாள்கள் முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்கத் தமிழ் மகளிர் பாடசாலையில் வழங்கப்பட்டது. நிகழ்வில் விசன்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மயூரன், விசன்ஸ் நிறுவனத்தின் முல்லைத்தீவு வலய ஒருங்கிணைப்பாளர் சிறி, நிறுவனத்தின் ஏனைய வளவாளர்கள், மூன்று பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள் மற்றும் குமுழமுனை மகா வித்தியாலய பாடசாலை அதிபர் ஜெயவீரசிங்கம் எனப் பலரும் கலந்துகொண்டனர். தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும், கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஓய்வு நிலை அதிபரும், சமூக சேவகருமான அமரர் ஆ.சி.நடராஜாவின் 12 ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும், மாணவர் கல்வி ஊக்குவிப்பு வழங்கும் வைபவமும் குரும்பசிட்டி கலைவாணி கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.விஷ்ணுகரன் கலந்து கொண்டார். (ப-66)




சுழிபுரம் கிழக்கு, கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் கொழும்பு, ஹல்பிட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பு அண்மையில் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. (ப-125)



கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியன இணைந்து முன்னெடுக்கும் 'விதையனைத்தும் விருட்சமே' செயற்றிட்டத்தினூடாக யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 104 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வழங்கப்பட்டன. (ய-27)



பிரான்ஸ், மாதகல் நலன்புரிச் சங்கத்தால் மாதகல் விநாயகர் விளையாட்டுக் கழகத்தினருக்கு மாதகல் நலன்புரிச் சங்க அலுவலகத்தில் வைத்து அண்மையில் ஒருதொகை நிதி உதவி வழங்கப்பட்டது. மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக பாரம்பரிய விளையாட்டு விழா நடத்துவதற்கே குறித்த நிதி உதவி வழங்கப்பட்டது. (ப-66)



சுழிபுரம் கலைமகள் அறநெறிப் பாடசாலையால் அண்மையில் கோலப்போட்டி நடத்தப்பட்டது. கலைமகள் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் புத்தாக்க ரீதியாக பல்வேறு கோலங்கள் இட்டனர். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சுழிபுரம் மேற்கு ஹரிகர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் பரிசில்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன. மாணவர்களிடையே ஆன்மீக சைவ சமய விழுமியங்களை மேம்படுத்தும் முகமாக மாதாந்தப் போட்டிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ப-125)


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
### பழைய மாணவர் சங்கம்
### புதிய நிர்வாகக் குழுத் தெரிவு
### 2024-2025

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகக் குழுவிற்கான (2024-2025) வேட்புமனு தேர்தல் குழுவினால் கோரப்பட்டுள்ளது.

புதிய நிர்வாகக் குழுவிற்கான வேட்புமனுப் பத்திரங்களையும், மேலதிக விபரங்களையும் எமது **www.jhcobajaffna.com** எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வேட்புமனு தாக்கலுக்கான இறுதித் திகதி : 19.02.2024**

**அ.யசீகரன்**
**செயலாளர்**

05.02.2024


## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 08 | | 04 |
| 11 | | 02 |
| 1948 | | 2024 |



### செல்வநாயகம் பாறுபதி

அவ்வொல்லை வீதி புலோலி மத்தி பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வநாயகம் பாறுபதி அவர்கள் நேற்று (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்தி பொன்னு தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவஞானம், சிவானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குணநாயகம், காலஞ்சென்ற கலாவதி மற்றும் குலநாயகம், திருமகள், வாலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும்,. காயத்ரி. தர்ஷன். கார்த்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபாகரகன், சுதாகர் ஆகியோரின் அன்பு மாமியும். வசீதன், கவீஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**076 853 4215** குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் முன்னணி போராட்டம்

முல்லைத்தீவு, பெப். 5

இலங்கையின் சுதந்திரநாள் தமிழர்தேசத்தின் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஏழு விடயங்களை முன்வைத்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதிவேண்டும், தமிழ் இனப்படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை தேவை, தமிழ் அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படுதல் வேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்படவேண்டும், தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பு உடனடியாக நிறுத்தப்படவேண்டும், தமிழர் தாயகத்திலுள்ள வரலாற்றுத் தொல்லியல் சான்றுகளை அழிக்காதே, இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டித் தீர்வு வேண்டும் உள்ளிட்ட ஏழு விடயங்கள் இவ்வார்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டதுடன், நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரிலான மைத்திரி - ரணில் அரசாங்கம், தமிழ்த் தரப்புடன் இணைந்து தயாரித்த புதிய ஏக்கியராஜ்ஜிய (ஒற்றையாட்சி) அரசமைப்பு வரைவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முற்றாக நிராகரிப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, தமிழ் இன அழிப்புக்கான நீதி, நில ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்படுதல் உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-19)



கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்தில் யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் பனை அபிவிருத்திச் சபையினர் அண்மையில் கலந்துரையாடலொன்றை நடத்தினர். சபையின் தலைவர் கிரிஷாந்த பத்திரண தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. (ப-9)

## களேபரமானது...

இலங்கையின் சுதந்திரதினம் நேற்றுக் கொண்டாடப்பட்ட நிலையில், தமிழ் மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுவதை முன்னிறுத்தி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அந்த நாளை கரிநாளாகப் பிரகடனப்படுத்தியிருந்தது. கிளிநொச்சியில் எதிர்ப்புப் பேரணி ஒன்றையும் ஏற்பாடு செய்திருந்ததுடன், அதில் கலந்துகொள்ள அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுத்திருந்தது.

இந்தப் பேரணியைத் தடுக்கும்நோக்கில் பொலிஸாரால் ஐவருக்கு எதிராக நீதிமன்றத் தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது. யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் செயற்பாட்டாளர்களான லீலாதேவி, கலாரஞ்சினி, கோகிலவாணி மற்றும் சிவில் செயற்பாட்டாளர் ஒருவர் அடங்கலாக ஐவருக்கு எதிராகவே பொலிஸார் தடை உத்தரவைப் பெற்றிருந்தனர்.

இரணைமடுச் சந்தியில் இருந்து பேரணி ஆரம்பித்தது. அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சிகளைச் சார்ந்தோர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் இந்தப் பேரணியில் இணைந்திருந்தனர்.

154 ஆம் கட்டைப் பகுதியில் பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாகவும் வீதித்தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அங்கு விசேட அதிரடிப் படையினர், கலகத்தடுப்புப் பொலிஸார் குவிக்கப்பட்டு பேரணி தடுக்கப்பட்டது. அதையடுத்து பொலிஸாருக்கும், பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கும் இடையே முறுகல் நிலைமை ஏற்பட்டது.

பொலிஸார் பேரணியை முன்னகர விடாது தடுத்ததுடன் தண்ணீர் தாரைப்பிரயோகம், கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு நடத்தி பேரணியைக் கலைத்தனர். பேரணியில் கலந்துகொண்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதலும் நடத்தினர். நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களில் சிலர் பொலிஸாரால் இழுத்துச் செல்லப்பட்டு வாகனங்களில் ஏற்றப்பட்டனர். பேரணியில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஏனையவர்களும் அதைத் தடுக்க முயன்றபோது, அவர்கள் மீதும் பொலிஸார் பலப்பிரயோகம் மேற்கொண்டனர். பேரணியில் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் 5 பேர் பொலிஸாரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்கவேண்டும் என்று பேரணியில் கலந்து கொண்டவர்கள் வலியுறுத்திய போதும், பொலிஸார் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். அதையடுத்து கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்க வலியுறுத்தி வீதியில் அமர்ந்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸ் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினர். சுமார் 4 மணிநேரப் போராட்டத்தின் பின்னர், கைது செய்யப்பட்ட மாணவர்கள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (அ-எ-125-20)

## முகாமையாளர்...

தொற்று ஏற்பட்டு, மரணம் சம்பவித்தது என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த வேலன் பிரேமதாஸா (வயது-54) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் கடந்த 28 ஆம் திகதி கரவெட்டி பனை தென்னை வளச் சங்கத்துக்குச் சென்றிருந்தார். அங்கே எழுந்த முரண்பாட்டையடுத்து, சங்கத்தின் முகாமையாளர் அவரைத் தூக்கி மேசை மீது வீசித் தாக்கினார் என்று கூறப்படுகின்றது. கடந்த 31ஆம் திகதி பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவருக்கு கால் மற்றும் விலா என்புகளில் முறிவு ஏற்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. நேற்றுக் காலை அவர் உயிரிழந்தார்.

கரவெட்டி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டனார். சட்ட மருத்துவ அதிகாரி க. வாசுதேவா உடற்கூற்றுப் பரிசோதனையை முன்னெடுத்தார். என்புமுறிவால் ஏற்பட்ட கிருமித்தொற்றுக் காரணமாக, நிமோனியாவால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-எ-100)

## இறக்குமதிக்...

தமிழர் பிரதேசங்களில் இலங்கையில் சுதந்திரதினம் கரிநாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், இந்தக் குழு கொண்டாட்டங்களில் ஈடுபட்டது.

அந்தக் குழு யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நடத்திய ஊர்வலத்தில் வேறு மாகாணங்கள், மாவட்டங்களில் இருந்து வந்தவர்களும், படைப் புலனாய்வு உறுப்பினர்களுமே பெரும்பான்மையாகக் காணப்பட்டுள்ளனர். இராணுவப் புலனாய்வுப்பிரிவே தன்னால் இயக்கப்படும் குழு ஒன்றின் மூலம் இந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. இந்தக் குழு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்திய கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கலந்துகொண்டார். இவர் கடந்த காலங்களில் இலங்கை பௌத்த நாடு என்று வலியுறுத்துவதுடன், குருந்தூர்மலை விவகாரம் மற்றும் தமிழர் விடயங்களில் இனவாதக் கருத்துகளை வெளியிட்டு வருகின்றார் என்பதும் தெரிந்ததே. (அ-எ-26)

## இலங்கையின்...

பெண் பொலிஸார் இல்லாது பெண்கள் இழுத்துச் செல்லப்பட்டனர். அதைத் தடுக்க முயன்ற என்மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இவற்றுக்கான காணொலி ஆதாரங்கள் இருக்கின்றன. எதிர்வரும் நாள்களில் சட்ட நடவடிக்கை எடுப்போம். பொலிஸார் மிகவும் மோசமாகவும், மிலேச்சத்தனமாகவும் நடந்துகொண்டனர். இலங்கையின் தேசியக் கொடி இன்னும் தமிழர்களை அரவணைக்கவில்லை - என்றார். (அ-எ-இ)

## இன்னும்...

போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனநாயக ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பேரணியில் பொலிஸார் தாக்குதல் நடத்தியதும், கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு நீர்த்தாரைப்பிரயோகம் மேற்கொண்டதும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது. பொலிஸார் நடந்துகொண்டவிதம் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறையை வெளியுலகுக்குக் காட்டும். வீதியில் சென்றவர்களும் வழிமறித்துத் தாக்கப்பட்டனர். இது அவர்களின் தமிழர் விரோத மனநிலையைக் காட்டுகின்றது. தமிழர்களுக்கு இந்த நாட்டில் சுதந்திரம் இல்லை என்பதையே இந்தச் சம்பவங்கள் காட்டுகின்றன - என்றார். (அ-எ-125)

## தொடர்...

மாற்றப்பட்டிருந்தார். நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26-100)

## சுதந்திரதின...

சுதந்திரதின நிகழ்வுக்கு கொழும்பிலுள்ள அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டுத் தூதுவர்கள் அழைக்கப்படுகின்றமை மரபாகும். ஆனால், இந்த முறை தூதுவர்கள் பங்குபற்றவில்லை. இவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையா? அல்லது அழைப்பு விடுக்கப்பட்டும் அவர்கள் நிகழ்வில் கலந்துகொள்ளவில்லையா? என்பது தொடர்பில் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. விருந்தினர் அழைப்பு ஏற்பாடுகளை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சே மேற்கொண்டது என்றும் கூறப்படுகின்றது. ஆயினும் வெளியுறவு அமைச்சு இது தொடர்பாக எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

அதேநேரம், சுதந்திரதின நிகழ்வுக்கு சீன சார்புடைய தாய்லாந்து பிரதமர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டமையே தூதுவர்களின் புறக்கணிப்புக்குக் காரணமாக இருக்கலாம் என்று கொழும்பு அரசியல் தகவல்கள் கூறுகின்றன. (அ-எ-இ)

## வெகு...

கப்பட்டது. இலங்கை விமானப் படை விமானங்கள் வான் சகாசங்களில் ஈடுபட்டன.

இந்த நிகழ்வுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதும், அவர் பங்குபற்றவில்லை. அதேவேளை, இந்த நிகழ்வுகளைப் பார்வையிடுவதற்குப் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. (அ-எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு, கப்பலேந்தி மாதா ஆலயத்தில் அண்மையில் புனித செபஸ்தியார் பெருவிழா கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை அ.அமல்ராஜ் தலைமையில் ஆரம்பமான பெருவிழாவில் திருப்பலியை அருட்தந்தை ரமேஷ் ஒப்புக் கொடுத்ததோடு, அருட்தந்தை ச.வின்சன் அவருடன் இணைந்து பெருவிழாவை சிறப்பித்தார். திருப்பலி நிறைவில் அண்மையில் இலங்கை அரசின் உயரிய விருதான மனிதநேயம் மிக்கவருக்கான 'தேசபந்து' விருதைப் பெற்ற அருட்தந்தை ரமேஷ் பங்குமக்களால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

(ப-27)

# வாகன விபத்தில் தம்பதியர் பலி!

கொழும்பு, பெப். 5

மோட்டார் சைக்கிள்- ஹைஏஸ் விபத்தில் தம்பதியர் உயிரிழந்துள்ளனர். கண்டி, தலத்துஓயா ஹரகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியினர் படுகாயமடைந்த நிலையில் கண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்தனர். விபத்து தொடர்பில் ஹைஏஸ் வாகனச் சாரதியை கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

**விற்பனைக்குண்டு**

தரமான
விதை வெங்காயம்
விற்பனைக்குண்டு.

077 569 5159

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு A-9 வீதி கைதடி சந்தி அருகாமை.

(CS 27812) A 1

தொடர்பு: 071 173 3911
076 853 5022


## மாதகல் புனித லூர்து அன்னை திருத்தலத் திருவிழா 17.02.2024

மாதகல் தலைமுகப் பகுதியில் அமைந்துள்ள புனித லூர்து அன்னை திருத்தலத் திருவிழா எதிர்வரும் 17.02.2024 ஆம் திகதி சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. புனித லூர்து அன்னை வழியாக ஆண்டவன் அருளைப் பெற்று இறையுறவில் வளமுடன் வாழ பக்தர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- 08.02.2024 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 04.45 மணிக்கு திருச்செபமாலையின் பின் கொடியேற்றத்துடன் திருப்பலி ஆரம்பமாகும்.
- தினமும் மாலை 04.45 மணிக்கு திருச்செபமாலையுடன் நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகும்.
- 16.02.2024 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 06.00 மணிக்கு புனித லூர்து அன்னையின் திருச்சொரூபத் தேர்ப்பவனியும், நற்கருணை வழிபாடும், நற்கருணைப் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.
- 17.02.2024 ஆம் திகதி சனிக்கிழமை காலை 07.00 மணிக்கு திருநாள் திருப்பலி யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்பணி கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

பங்குத்தந்தை,
புனித தோமையார் ஆலய பங்கு மக்கள்,
மாதகல்.

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை திருநாவுக்கரசு (ராசு)

(முன்னாள் கொழும்பு றெஸ்ரோரன்ற் நடத்துநர்)

நெல்லொருபதி பிள்ளையார் கோயில் தாவடி தெற்கு, கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை திருநாவுக்கரசு கடந்த 02.02.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை தையல்முத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் இரத்தினம்மா (தாவடி) தம்பதியினரின் அன்பு மருமகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், பிரணவி (கனடா), சனார்த்தனன் (கனடா), சனோஜன், வைஸ்ணவி ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜன் (கனடா), சாய்சங்கர் (Sai photography) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆராதனாவின் (கனடா) அன்புப் பேரனும், சரஸ்வதிதேவி (கனடா), சந்திராதேவி, தங்கராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசலிங்கம் (கனடா), ஈஸ்வரராஜா, காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் தர்மகுலசிங்கம் (கனடா), பரமேஸ்வரலிங்கம் (பிரான்ஸ்), இராசலிங்கம், சிவதாஸ் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி, ரஞ்சினிதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், சகுந்தலாதேவி (கனடா), பத்மலோஜினி (பிரான்ஸ்), யோகராணி, ஜெயந்தினி (பிரான்ஸ்), விக்னேஸ்வரன் (கனடா) மற்றும் காலஞ்சென்ற பற்குணராஜா அவர்களின் உடன்பிறவா சகோதரரும், சாந்தசொரூபன் (கனடா), சாந்தஜித் (கனடா), சாந்தமோகன் (கனடா), சாந்தினி (கனடா), கார்த்திகாயினி (கனடா), கல்யாணி (லண்டன்), திபாலினி (கனடா), ஜலக்சினி, ரசிக்கா (கனடா), கஜன் (கனடா), ரோகினி (பிரான்ஸ்), பிராசாந் (பிரான்ஸ்), பிரகாஸ் (பிரான்ஸ்), சுரேக்கா, துசாந்தன், மதுராஜ், பகீசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், குகேசன், அனுஜன், விஸ்ணு ஆகியோரின் சித்தப்பாவும், விதூன் (கனடா), அபிநயா (கனடா), அக்சயா (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 16.04.1958 | மறைவு 02.02.2024

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு,கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
075 523 5097

(CS 53856) N.1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org